2002 ஏப்ரல் 26]

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

147. மிதிவண்டி (சைக்கிள்) டியூபுகளில் (Tubes) பயன்படுத்துகின்ற ஒட்டு பசையிலான ரப்பர் துண்டு தொடர்பாக 1990-91 முதல் 1994-95 வரையிலான கால அளவில் நடைபெற்ற விற்பனை மீது "திருவாளர்கள் யூனி பாட்ச் ரப்பர் நிறுவனம் (Uni Patch Rubber)" செலுத்தத்தக்க வரி, மேல் வரி, கூடுதல் மேல் வரி வகையில் வேறுபாட்டுத் தொகையான மூன்று சதவீதம் மற்றும் எட்டு சதவீதத்திற்கும் இடையே வரக்கூடிய வேறுபாட்டுத் தொகையான மொத்தம் ரூ.3,31,377/-ஐ 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் (மேல்வரி) சட்டம் ஆகிய சட்டங்களின் கீழ் தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 3-1-2001 ஆம் நாளிட்ட அரசாணை (2டி) எண் 2-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் (மேல் வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7(3) பிரிவுகளின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

148. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையிடப்பட்ட பொருட்கள் உள்ளூர் பகுதிகளுக்குள் கொண்டு வரப்படுகையில், அவற்றிற்குக் குறிப்பிடப்பட்டுள்ள வரி வீதங்களில் 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளூர் பகுதிகளில் பொருட்கள் கொண்டு வருவதற்கான நுழைவு வரிச் சட்டத்தின்கீழ் வரி விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட வேண்டும் என்று நிர்ணயிப்பது குறித்து வணிகவரிகள் துறையின் 30-11-2001 ஆம் நாளிட்ட 114 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளூர் பகுதிகளில் பொருட்கள் கொண்டு வருவதற்கான நுழைவு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/2001) 14 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

173. மதிப்பீட்டுக் குழுவின் ஆறாவது அறிக்கை. (2001-2002)

174. மதிப்பீட்டுக் குழுவின் ஏழாவது அறிக்கை. (2001-2002)

175. பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்து எட்டாவது அறிக்கை. (2001-2002)

[2002 ஏப்ரல் 26

176. பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்து ஒன்பதாவது அறிக்கை. *(2001-2002)*

177. பொதுக் கணக்குக் குழுவின் எழுபதாவது அறிக்கை. *(2001-2002)*

178. பொதுக் கணக்குக் குழுவின் எழுபத்து ஒன்றாவது அறிக்கை. *(2001-2002)*

179. பொதுக் கணக்குக் குழுவின் எழுபத்து இரண்டாவது அறிக்கை. *(2001-2002)*

180. பொதுக் கணக்குக் குழுவின் எழுபத்து மூன்றாவது அறிக்கை. *(2001-2002)*

181. பொதுக் கணக்குக் குழுவின் எழுபத்து நான்காவது அறிக்கை. *(2001-2002)*

182. பொதுக் கணக்குக் குழுவின் எழுபத்து ஐந்தாவது அறிக்கை. *(2001-2002)*

183. உடுக்குறியிடாத வினாக்கள் - விடைகள் பட்டியல் (எட்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).

184. மானியக் கோரிக்கை எண் 43 - சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003. (தமிழ், ஆங்கிலம்)

185. சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் செயல்முறைத் திட்டம், 2002-2003. (தமிழ், ஆங்கிலம்)

186. சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் "மக்கள் சாசனம்" என்ற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

187. மானியக் கோரிக்கை எண் 43 - 2002-2003 ஆம் ஆண்டிற்கான சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறைக்கான விரிவான மானியக் கோரிக்கை.